**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 92/2017**

**வாதி தரப்பு சாட்சி-1 சண்முகம் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) எனது பெற்றோர் பெயர் கருப்பையா, வெள்ளையம்மாள் என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு வளர்மதி, சண்முகம், கண்ணன், சீனிவாசன் ஆகியோர் வாரிசுகள். நாங்கள் அனைவரும் பாப்பனம்பட்டியில் வசிக்கிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்தது எனது தந்தை கருப்பையா என்றால் சரிதான். எனது அம்மா தற்போது இருக்கிறார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டதால், நாங்கள் வாரிசு அடிப்படையில் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கு சங்கதிகளை எனது தகப்பனார்தான் வழக்கறிஞரிடம் சொன்னாரா என்றால் ஆமாம். வரவணை கிராமத்தில் நத்தம் சர்வே எண் 959/12 ல் கண்டுள்ள சொத்துக்கள்தான் எங்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி சொத்திற்காக பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. வருவாய் துறையில் எனது தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்ட அசல் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அசல் பட்டாவை தாக்கல் செய்யாமல் உண்மை நகல் தாக்கல் செய்ததற்கான காரணம் என்னவென்றால், தற்போது யார் பெயரில் உள்ளது என காட்ட உண்மை நகல் தாக்கல் செய்யப்பட்டது.

2) அசல் பட்டாவிற்கும், உண்மை நகலுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா என்றால் இல்லை, ஒரேமாதிரிதான் உள்ளது. எனது தகப்பனார் பெயரில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ.4 அரசு எங்களுக்கு வழங்கிய பட்டா என்றும், மேற்படி சொத்து எங்களுக்கு பூர்வீகமாக உரிமை ஆவணத்தின் மூலமாகவோ பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வழங்கப்படுவதற்கு முன்பு மேற்படி நிலம் அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், எங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது. வா.சா.ஆ.4 ல் கண்ட சர்வே எண்ணில் அதில் கண்டுள்ள விஸ்தீரணம் மட்டும்தான் எங்களுக்கு

பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் கிழமேலாக செல்லும் ரோட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் 958 ஆகும். சர்வே எண் 958 வருவாய் துறை ஆவணங்களில் எவ்வாறு வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அரசுக்கு பாத்தியப்பட்ட ரோடு என உள்ளது.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**